*1994 ஏப்ரல் 5]*

பதிலைச் சொல்லி இருக்கிறார்கள். அதைப்போல அந்தத் தொழில் பேட்டை தொடங்க இந்த ஆண்டே 50 பேர் முன்வந்தால் அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரை ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டே அதை எடுத்துக்கொள்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 189, டாக்டர் வெ. சரோஜா, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

*189--*

**கோயம்புத்தூர் வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் காளான் வளர்ப்புப் பயிற்சி அளித்தல்.**

***22636-டாக்டர் வெ. சரோஜா:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) கோயம்புத்தூர் வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் காளான் வளர்ப்பு பற்றி விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், என்னென்ன வகைக் காளான்கள் வளர்க்க பயிற்சி அளிக்கப்படுகிறது?

(இ) இங்கு காளான் விதை உற்பத்தி செய்யப்படின், அவற்றை தமிழ்நாடு முழுவதும் வேளாண்மை அலுவலகங்களில் விற்பனை செய்ய அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சிப்பிக்காளான் வளர்ப்பு பற்றிய பயிற்சி மட்டும் வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் அளிக்கப்பட்டு வருகிறது.

(இ) தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தில் காளான் விதைகள் தற்சமயம் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படவில்லை என்பதால் தமிழ்நாடு முழுவதும் இந்த விதைகளை விநியோகிக்கும் திட்டம் அரசிடம் இல்லை.

**டாக்டர் வெ. சரோஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காளான் என்பது ஏழையெளிய மக்களின் மாமிச உணவு என்பதுதான் அதற்கு சரியான பொருளாகும். ஒரு குழந்தையின் வளர்ப்புக்கு easily digestable proteins மற்றும் குழந்தையின் வளர்ப்புக்கு வேண்டிய

அனைத்து நுண்ணூட்டச் சத்துக்களும் அதிலே ஒருங்கே அமைந்திருப்பதால் இந்த காளான் வளர்ப்புக்கு முன்னுரிமை கொடுத்து, காளான் வளர்ப்பை தமிழ்நாட்டில் முழுமையாக உற்பத்தி செய்து, தன்னிறைவு பெறும் வகையில் சிறப்புத் திட்டம் ஏதேனும் இருக்கிறதா? இதுவரையில் இல்லையென்றால் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் விவசாய அதிகாரிகளைக் கொண்டு பயிற்சி கொடுத்து ஆங்காங்கே இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன்வருமா? இல்லையெனில் என்னுடைய தொகுதியில்ாவது பரிட்சார்த்தமாக எடுத்து இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

**மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய சத்துக்கள் காளானில் இருப்பதை அறிந்துதான் இந்த அரசின் அறிவுரையின்படி ஒவ்வொரு மாதமும் 5 ஆம் தேதி கோவையிலுள்ள வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் காளான் வளர்ப்பு பற்றிய பயிற்சி அளித்து வருகிறது. இதுவரையில், 139 வகுப்புகள் நடைபெற்று, இதன்மூலமாக 19,632 பேர்கள் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். தமிழகத்தினுடைய முதல்வர், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் காளான் வளர்ப்பினை ஊக்கப்படுத்துகின்ற வகையிலே 69 லட்சம் ரூபாயை இந்த ஆண்டு முதல் செலவிடுவதற்கு அனுமதி வழங்கியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இந்தக் காளான் வளர்ப்பு பற்றிய பயிற்சியைப் பெற்று, அவர்களே இந்த பயிற்சியை மற்றவர்களுக்குச் சொல்லித்தந்து, ஒரு இனிய தொழிலை, புதிய தொழிலை அவர்களே துவக்க முன்வருவார்கள் என்று சொன்னால், அனைத்து உதவிகளையும் அரசாங்கம் செய்து தரும்.

**டாக்டர் வெ. சரோஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் நிறைய பெண்மணிகள் இந்தத் தொழிலில் ஈடுபட விருப்பம் தெரிவித்திருக்கிறார்கள். மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் இதனைச் செயல்படுத்த, விதைகளை மானிய விலையில் கொடுத்து, சென்னையில் ஒரு பயிற்சி மையத்தை ஏற்படுத்த, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காளான் வளர்ப்புக்கு முன்னுரிமை

*1994 ஏப்ரல் 5]*

தருவதற்காகத்தான் சென்னை அருகிலுள்ள திரூர், பவானிசாகர், விரிஞ்சிபுரம், மதுரை, திருச்சி, ஊட்டி ஆகிய இடங்களில் இந்த மாத இறுதிக்குள் 600 பேர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும். பயிற்சியில் பங்கு பெறக்கூடிய அந்தப் பயனாளிகளுக்கு விதைகள், வளர்ப்பு பற்றிய கருவிகள் ஆகியவைகள் அடங்கிய சிறுதளை பைகளும் வழங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. பி. ராஜு.

**திரு. கே.பி. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் நமது விவசாயத் துறை அமைச்சர் அவர்களும், என்னுடைய தொகுதியில் இருக்கிற விவசாயப் பல்கலைக் கழகத்திற்குச் சென்று, காளான் பயிரிடுகின்ற பயிற்சியைப் பார்த்தோம். அப்படிப் பார்க்கின்றபோது, காளானில் இருக்கின்ற சத்துக்களைப் பற்றியெல்லாம் அமைச்சர் அவர்களிடத்திலே அதிகாரிகள் விளக்கிச் சொன்னார்கள். அவர்கள் சொல்லுகின்றபோது, இது ஒரு வெஜிடேரியன் ஃபிஷ் என்று சொன்னார்கள். இதை மாமிசக் குழம்பிலே போட்டால் அது மாமிசமாகத் தெரியும். வெஜிடேரியன் குழம்பிலே போட்டால், அது மீனாகக்கூட தெரியும். ஆகவே, அப்படித் தெரிகின்ற காளானானது, வைட்டமின் சத்துள்ள ஒன்றாகும். எனவே, இந்தக் காளான் வளர்ப்பை குடிசைத் தொழிலாக மாற்றி, ஒவ்வொருவருக்கும் இதைப் பற்றிய பயிற்சியைத் தந்தால், கிராமங்களில் இருக்கிற படித்த வாலிபர்கள், இளைஞர்கள், மற்றும் பெண்கள் அத்தனை பேர்களும், இதைக் குடிசைத் தொழிலாக பயன்படுத்தினால், மாதம் ஒன்றுக்கு 2 ஆயிரம், 3 ஆயிரம் ரூபாய் சம்பாதிக்கக்கூடிய வகையில். . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுருக்கமாகக் கேள்வி கேளுங்கள். நீங்கள் போய்ப் பார்த்துவிட்டு வந்ததை எல்லாம் சொல்ல வேண்டாம்.

**திரு. கே. பி. ராஜு:** ஆகவே, இந்தக் காளான் தொழிலை குடிசைத் தொழிலாக மாற்றி, இந்த நாட்டிலுள்ள ஏழை எளியவர்களுக்கும் வாலிபர்களுக்கும் இதன் மூலம் வருமானம் வருவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்பினை உருவாக்குவதற்கும், வேளாண்மைத் தொழிலிலே ஈடுபட்டு, தங்களுடைய குடும்பத்தை நடத்துவதற்குப் போதிய வருவாய் இல்லாத நிலையில் இருக்கக்கூடிய பெண்களுக்கும் ஆடவர்களுக்கும் இந்தப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்தப் பயிற்சியைப் பெற்றவர்கள், குடிசைத் தொழில் அளவிலும், சிறிய அளவிலும் தொழில் தொடங்குவதற்கு முன்வந்தால், அரசு அவர்களுக்கு வங்கிகள் மூலமாகவோ, கூட்டுறவுச் சங்கங்கள்

மூலமாகவோ, கடன் பெறுவதற்கான வசதிகளை ஏற்படுத்தித் தரும். அல்லது, அதிக அளவிலே தொழில் துவங்க வேண்டும் என்று முன்வரக்கூடியவர்களுக்கு இந்தியத் தோட்டக்கலை வாரியத்தின் மூலமாக நீண்டகாலக் கடன் குறைந்த வட்டியிலே பெறுவதற்கு அரசு அனைத்து வழிவகைகளையும் செய்து தரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. தருமலிங்கம்.

முற்பகல் 10-40

**திரு. கி. தருமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் காளான்கள் கோயம்புத்தூரில் மட்டுமல்லாது தமிழகத்திலே அங்கொன்றும் இங்கொன்றுமாக முளைத்துக் கொண்டிருந்த காலக் கட்டத்தில் 1991ஆம் ஆண்டு புரட்சித் தலைவி அவர்கள் பொருளாதார அடிமட்டத் தொண்டர்களுக்கு பயிற்சி அளித்து நிரம்ப காளான்களை உற்பத்தி செய்ய உதவி செய்தார்கள். அந்தக் காளான்களை, இன்று அழிந்து விட்டனவா என்று எனக்குத் தெரியவில்லை. இந்தக் காளான்கள் மக்களுக்கு நன்றாக ஊட்டச்சத்து கொடுக்கும் காளான்களை மக்களுக்கு சேவை செய்யும் காளான்களை அந்த உணவு உட்கொள்ளும்போது நமக்கு உயிருக்கு ஊட்டச்சத்தாக .... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியாகக் கேளுங்கள். கேள்வியாகக் கேட்டால்தான் பலருக்கு நாம் வாய்ப்புக் கொடுக்கமுடியும். ஒவ்வொருவரும் அவரவர்களுக்குத் தெரிந்த சங்கதிகளை முழுவதுமாகக் கேள்வி நேரத்தில், துணைக் கேள்வியிலே பயன்படுத்த நினைத்தீர்கள் என்றால் நான் மற்றவர்களுக்கு துணைக் கேள்வி என்ற வாய்ப்புக் கொடுக்காமல் போக வேண்டியிருக்கும். நான் எல்லா உறுப்பினர்களுக்கும் சொல்லிக் கொள்கிறேன். துணைக்கேள்வி கேட்க வேண்டும் என்கிறவர்கள் வேறு எங்கெங்கேயோ போய்க் கொண்டிருந்தீர்கள் என்றால் நான் எல்லோருக்கும் வாய்ப்புக் கொடுக்கவே முடியாது.

**திரு. கி. தருமலிங்கம்:** வேளாண்மைத் துறை மூலம் புதிய காளான்களை அதாவது உடனடியாக அழியாத காளான்களை உற்பத்தி செய்ய வேளாண்மைத் துறை அமைச்சரவர்கள் முன்வருவாரா என தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உணவிற்காக பயன்படுத்தக்கூடிய காளான்களை வளர்ப்பதற்கு தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பல்வேறு திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறார்கள். அங்கொன்றும் இங்கொன்றுமாக தோன்றக்கூடிய சமுதாய விரோதக்

*1994 ஏப்ரல் 5*].

காளான்களை அழிப்பதிலே புரட்சித் தலைவி அவர்கள் முன்னணியில் இருந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 190, டாக்டர் ஜெய்சன் ஜேக்கப், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

*190*--

**ஆரணி தொகுதி, வடக்குமேட்டில் கால்நடை மருத்துவமனை அமைத்தல்**

***21758–டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

ஆரணி தொகுதி, வடக்குமேடு கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு தே. ஜனார்தனன், பால்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆரணி தொகுதி, வடக்குமேடு கிராமத்திலே கால்நடை மருத்துவமனை அமைக்க தற்பொழுது அரசிடம் செயற்குறிப்பு எதுவும் இல்லை.

**டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியிலே இருக்கின்ற இந்த வடக்குமேடு என்கிற இடம் தொகுதியினுடைய எல்லையிலே இருக்கிறது. அந்தக் கிராமத்திலே இருக்கிற மக்கள் அனைவரும் தங்களுடைய முக்கிய தொழிலாகக் கொண்டிருப்பது கால்நடையை வாங்கி பால் கறந்து அதன்மூலம் குடும்ப வருவாயை ஈட்டிக்கொண்டிருக்கிறார்கள். அந்தக் கால்நடைகளுக்கு ஏதாவது ஒன்று என்று சொன்னால் அவர்கள் அந்தப் பகுதியிலிருந்து கிட்டத்தட்ட 7 கிலோமீட்டர் தூரத்திலே இருக்கிற சத்தியவிஜயநகரம் என்று சொல்லக்கூடிய கால்நடை மருத்துவமனைக்கு வர வேண்டியிருக்கிறது. அதைத் தவிர்ப்பதற்காகத்தான் அங்கே வாழ்கிற மக்களுக்கு ஒரு கால்நடை மருத்துவமனை வேண்டும் என்கிற வினாவினை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டேன். அவர் இல்லை என்று பதில் அளித்திருக்கிறார்கள். இருந்தாலும்கூட, என்னுடைய இந்தக் கோரிக்கையினை அமைச்சரவர்கள் கருணையோடு பரிசீலிப்பாரா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண். 191, திரு. ஏ. ரவிக்குமார், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.